புதிய கல்வியாண்டு - 2022

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –

தரம் 5



zoom வகுப்புக்கள்

பிரிவு 1

மாதம்
1500/=

திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி	ஞாயிறு
நுண்ணறிவு	தமிழ்	கணிதம்	நுண்ணறிவு	சுற்றாடல்	சிங்களம்	ஆங்கிலம்

காலை 5.00 – 6.00

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021

தரம் ஐந்து மாணவர்களுக்கான


முன்னோடிப் பரீட்சை - இல-06

வினாத்தாள் - I

சுட்டெண்:- .....

நேரம் :- 1 மணித்தியாலம்

- பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
  - உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
  - இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
  - ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.
  - செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

(01) 

இக்கோளம் புள்ளிக்கோடுகளின் வழியே மூன்று துண்டுகளாக வெட்டப்பட்டது. அதன்படி, அம்மூன்று துண்டுகளிலும் உள்ள முகங்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 7 (2) 8 (3) 6

(02) இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.

(1) □ ம ல H ஸ △ = □ ம ல H ஸ ▽ (2) ⊔ ⌓ R ண S ∪ = ⊔ ⌓ R ண Ƨ ∪

(3) ☒ A வ ⊕ ← க = ☒ A வ ⊕ ← க

(03) தரப்பட்டுள்ளவற்றிடையே மூன்றை ஒரு கூட்டமாகவும், இரண்டை வேறொரு கூட்டமாகவும் பிரிக்கலாம். அவற்றில் இரண்டைக் கொண்ட கூட்டத்திற்குரியவை,

அநுராதபுரம் - நாடு - இரத்தினபுரி - நகரம் - மாகாணம்

(1) இரத்தினபுரி - அநுராதபுரம் (2) நாடு - மாகாணம் (3) நகரம் - இரத்தினபுரி

(04) **1 ஆம் சந்தர்ப்பம் :-** 3 → 5 → 7 → 8

2 ஆம் சந்தர்ப்பம் :- 2 → 8 → 6 → 10

3 ஆம் சந்தர்ப்பம் :- 5 → 4 → 8 → □

1 ஆம், 2 ஆம் சந்தர்ப்பங்களில் இலக்கங்களின் தொடர்புகளின்படி, 3 ஆம் சந்தர்ப்பத்தின் வெற்றுக்கூண்டிற்குப் பொருத்தமான எண்,

(1) 6 (2) 12 (3) 20

(05)

1		5
	7	3

இச்செவ்வக வடிவக் கூண்டினுள் உள்ள இலக்கங்கள் எல்லாவற்றையும் பயன்படுத்தி அமைக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணினதும் மிகச்சிறிய எண்ணினதும் கூட்டுத்தொகை,

(1) 7106 (2) 9068 (3) 8888

(06)

3	7	6	4
6	P		7
4			3
7	3	4	6

இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள எண்களைக் கிடையாகவும், நிலைக்குத்தாகவும் கூட்டும்போது வரும் விடையானது 20 எனின், P எனும் கூண்டிற்குள் வரவேண்டிய எண்களைக் கொண்ட விடை,

(1)

4	3
6	7

(2)

6	3
4	7

(3)

3	4
8	6


(07) சரியான கோவையைத் தெரிவு செய்க.

(1) 222 + 22 + 22 + 22 + 2 = 280 (2) 222 + 22 + 22 + 2 + 2 = 270 (3) 222 + 22 + 2 + 2 + 2 = 260


(08) குறித்த பாடசாலையொன்றில் 5A வகுப்பில் 28 மாணவர்களும், 5B வகுப்பில் 23 மாணவர்களும் உள்ளனர். 5B வகுப்பிலிருந்து 5 மாணவர்கள் 5A வகுப்பிற்குச் சென்றனர். தற்போது 5B வகுப்பை விட 5A வகுப்பில் அதிகமாக உள்ள மாணவர்களின் எண்ணிக்கை,


(1) 10 (2) 5 (3) 15


www.ikeou.lk


(09) 

இப்பெரிய சதுரமுகி ஒரேயளவான சிறிய சதுரமுகிகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டப்பட்டதன் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பெரிய சதுரமுகியிலிருந்து 11 சிறிய சதுரமுகிகளை நீக்கியதன் பின் காணக்கூடிய முறை,

(1) 

(2) 

(3) 


(10) 


உண்டியலொன்றில் இருந்த நாணயங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களை இவ்வட்ட வரைபு காட்டுகிறது. உண்டியலில் இருந்த ரூபா 10.00 நாணயக் குற்றிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 40.00 ஆகும். அதன்படி, உண்டியலில் இருந்த ரூபா 5.00 நாணயக் குற்றிகளின் மொத்த எண்ணிக்கை,


(1) 8 (2) 4 (3) 6


(11) யமுனாவின் புத்தகப்பையைத் தெரிவு செய்க.

* அடிமட்டம் உள்ளது. * பென்சிலொன்று உள்ளது. * தண்ணீர் போத்தலொன்று உள்ளது. * அழிறப்பரொன்று இல்லை.

(1) 

(2) 

(3) 

(12) 

இவ்வுரு அமைக்கப்பட்டுள்ளது எல்லா பக்கங்களும் நீளத்தால் சமனான ஒரேயளவான சிறிய முக்கோணங்கள் 4 இனால் ஆகும். இவ்வுருவிற்கு வரையக்கூடிய சமச்சீர் அச்சுகளின் எண்ணிக்கை,

(1) 2 (2) 4 (3) 3

(13) வருடத்தில் ஒன்றுக்கொன்று அருகில் அமைந்துள்ள சில மாதங்களின் நாட்களின் எண்ணிக்கைகள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.


P	Q	R	S	T
31	29	31	30	31

இம்மாதங்கள் உரித்தாகும் வருடமாக இருக்கக்கூடியது,

(1) 2018 (2) 2016 (3) 2019

(14) கீழே காட்டப்பட்டுள்ளது சில பொருட்களினுடைய விலைகளின் கூட்டுத்தொகைகளாகும்.

 = ரூபா 130.00


 = ரூபா 110.00

மேலேயுள்ள விலைகளின்படி, புத்தகமொன்றினதும் பேனையொன்றினதும் விலை,

(1) ரூபா 80.00 (2) ரூபா 110.00 (3) ரூபா 100.00

(15) குறித்த புத்தகமொன்றின் 34 ஆவது பக்கத்திலிருந்து 87 ஆவது பக்கம் வரை நீல நிறத்தால் அச்சிடப்பட்டுள்ளது. அதன்படி, நீல நிறத்தினால் அச்சிடப்பட்டுள்ள பக்கங்களின் எண்ணிக்கை,

(1) 53 (2) 55 (3) 54

(16) 

இக்கணிதச் செய்கையில் 10 இற்கும் குறைந்த இலக்கங்கள் குறியீடுகளினால் காட்டப்பட்டுள்ளன. அதன்படி, ■ இக்குறியீட்டின் பெறுமதி,

(1) 5 (2) 2 (3) 6

(17) பிள்ளையொன்று தெற்குத் திசைக்குச் செல்லும்போது அதன் நிழல் விழுந்திருந்தது அப்பிள்ளையின் இடக்கைப் பக்கத்திற்காகும். அதன்படி, அப்பிள்ளை பயணித்த வேளை,

(1) மாலை வேளை (2) காலை வேளை (3) கூறமுடியாது

(18) ஒரு விலங்குப் பண்ணையில் ஆடுகளைப் போல் இரண்டு மடங்கு கோழிகள் இருந்தன. விலங்குப் பண்ணையிலிருந்த கோழிகளின் கால்களின் எண்ணிக்கை 24 எனின், அங்கிருக்கும் ஆடுகளின் எண்ணிக்கை,

(1) 12 (2) 8 (3) 6

(19) முதலில் தரப்பட்டுள்ள உருக்களுக்கிடையிலான தொடர்பை நன்கு அவதானிக்குக.

✱ + ✱ = △

□ + □ = ✱

இத்தொடர்புகளின்படி, ஒவ்வொரு உருவின் பெறுமானத்திற்கும் ஏற்ப பெறுமதி கூடிச்செல்லும் ஒழுங்கில் வரையப்பட்டுள்ள விடை

(1) ✱ △ □ (2) □ ✱ △ (3) △ □ ✱

www.lkedu.lk

(20) குறித்த ஒரு நாளில் இரவு வேளையில் தந்தை, தாய் மற்றும் மகன் வேலையிலிருந்து வீட்டிற்குத் திரும்பிய நேரங்கள் கீழ்வரும் கடிகார முகங்களினால் காட்டப்பட்டுள்ளன.


தந்தை


தாய்


மகன்

அவர்கள் வீட்டிற்குத் திரும்பிய நேரங்களின்படி, அவர்களின் பெயர்கள் ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள விடை,

(1) தாய் - தந்தை - மகன் (2) மகன் - தாய் - தந்தை

(3) தந்தை - மகன் - தாய்

*** பின்வரும் அட்டவணையிலுள்ள இலக்கங்களையும் எழுத்துக்களையும் நன்கு அவதானித்து, இலக்கம் (21), (22) ஆகிய வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.**

H	3	5	T
5	R	A	3
4	7	H	R
R	3	T	7


(21) அதிக தடவைகள் இடம்பெற்றுள்ள இலக்கம்,

(1) 5 (2) 7 (3) 3

(22) அதிக தடவைகள் இடம்பெற்றுள்ள எழுத்து,

(1) H (2) R (3) T


(23)



இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின்,

(1) $\frac{3}{4}$ பங்காகும் (2) $\frac{1}{4}$ பங்காகும் (3) $\frac{2}{3}$ பங்காகும்

(24)




இங்கு தரப்பட்டுள்ள கூண்டினுள்ளே இருக்கும் ஒவ்வொரு உருவிற்கும் ஏதோவொரு பெறுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்வுருக்களின் பெறுமதிகளின் கூட்டுத்தொகைகள் நிலைக்குத்தாகவும், கிடையாகவும் தரப்பட்டுள்ளன. அதன்படி, P நிரையின் கூட்டுத்தொகை,

(1) 10 (2) 12 (3) 8


(25)



உரு A



உரு B


உரு C

உரு A யிலிருந்து உருக்கள் B, C ஐ நீக்கினால் காணக்கிடைக்கும் முறை,

(1) 

(2) 

(3) 

(26) மணியொன்று ஒலித்த நேரங்களைக் கீழேயுள்ள அட்டவணை காட்டுகிறது.

1 ஆவது தடவை	2 ஆவது தடவை	3 ஆவது தடவை	4 ஆவது தடவை	5 ஆவது தடவை
மு.ப 5.00	மு.ப 6.00	மு.ப 8.00	மு.ப 11.00	.....

மணி ஒலித்த நேரங்களுக்கிடையிலான கோலத்தின்படி, 5 ஆவது தடவையாக மணி ஒலித்திருக்கும் நேரம்,

(1) பி.ப 3.00 (2) மு.ப 3.00 (3) பி.ப 2.00


(27) ● + ● + ● + ● = ▲ , ● x ● x ● = ▲ எனின், ● + ▲ இன் பெறுமதி,

(1) 12 (2) 16 (3) 10

(28) 60 இன் அரைவாசியின் $\frac{1}{3}$ உடன் 9 ஐக் கூட்டும்போது கிடைக்கும் எண்,

(1) 39 (2) 19 (3) 29


(29)



இவ்வுருவில் சம அளவிலான 16 சதுரங்கள் காணக்கிடைக்கின்றன. இவ்வுருவை அமைப்பதற்குத் தேவைப்படும் சம அளவு நீளத்திலான கம்பித்துண்டுகளின் மிகக்குறைந்த எண்ணிக்கை,

(1) 10 (2) 8 (3) 16

www.ikeduu.lk

(30) 

அருகே தரப்பட்டுள்ள உருவின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(31)


தியாகி ,	கல்வி ,	உலோபி ,	மிக்க ,	பிரதி ,	கிருமி

மேலே அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்கள் கீழ்வருமாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அக்கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.


உலோபி → பிரதி → தியாகி → ..... → ..... → .....

(1) மிக்க , கிருமி , கல்வி (2) கிருமி , மிக்க , கல்வி (3) கல்வி , மிக்க , கிருமி




(32) SEND இக்கார்ட்போர்ட் அட்டையை முகம் பார்க்கும் கண்ணாடியொன்றின் முன்னால் வைத்துப் பார்த்தால் புலப்படும் முறை,

(1)  (2) DNE S (3)

(33) 1 ஆம், 2 ஆம் உருக்களுக்கிடையிலான தொடர்பின்படி, மூன்றாவது உருவிற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.



உரு 1 உரு 2 உரு 3 .....

(1)  (2)  (3) 

(34) அப்பிள் பழமொன்றின் விலை ரூபா 22.00 ஆகும். சித்ராவிடம் இன்னும் ரூபா 10.00 இருந்தால் 4 அப்பிள் பழங்களைக் கொள்வனவு செய்யலாம். அதன்படி, சித்ராவிடம் உள்ள பணம்,


(1) ரூபா 98.00 (2) ரூபா 78.00 (3) ரூபா 88.00

(35) "BLOSSOM" எனும் சொல்லைக் குறியீடுகளினால் எழுதும்போது தேவைப்படும் குறியீட்டு வகைகளின் எண்ணிக்கை,

(1) 5 (2) 7 (3) 6


(36)  = 12 எனின்,  இன் பெறுமதி,

(1) 18 (2) 28 (3) 24

(37) 

முச்சக்கரவண்டி பயணம் செய்வது தென்கிழக்குத் திசைக்காகும். அதன்படி, கார் பயணிப்பது,

(1) வடகிழக்குத் திசைக்கு (2) தென்மேற்குத் திசைக்கு (3) வடமேற்குத் திசைக்கு

(38) 

சதுர வடிவமொன்றினுள் A யிலிருந்து B வரை பிள்ளையொன்று பயணம் செய்துள்ள முறை இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ளது. அப்பிள்ளை பயணம் செய்துள்ள தூரம் 16m ஆகும். அதன்படி, அச்சதுர வடிவத்தின் ஒருபக்க நீளம்,

(1) 16m (2) 8m (3) 6m

(39) பிள்ளையொன்றிடம் 12 சிவப்பு நிறப் பந்துகளும், 8 சிவப்பு நிறமல்லாத பந்துகளும், 5 பச்சை நிறப் பந்துகளும் மற்றும் மஞ்சள் நிறப் பந்துகளும் உள்ளன. அதன்படி, அப்பிள்ளையிடம் உள்ள மஞ்சள் நிறப் பந்துகளின் எண்ணிக்கை,

(1) 3 (2) 7 (3) 15

(40) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

உலகோர் உண்ண உணவு தரும்
உடலின் பிணிக்கு மருந்து தரும்
நிழலும் குளிரும் நமக்கு வரும்
நிலத்தின் மரத்தால் மாரி வரும்

இப்பாடல் கூறுவது,

(1) நாம் உண்ணும் உணவு பற்றியாகும். (2) பிணி தீர்க்கும் மருந்து பற்றியாகும். (3) மரத்தின் பயன்கள் பற்றியாகும்.

www.ikedu.lk

புதிய கல்வியாண்டு - 2022

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –

தரம் 5



Zoom வகுப்புக்கள்

மாதம்

பிரிவு 2 1200/=

சுற்றாடல்	ஆங்கிலம்	தமிழ்	சிங்களம்	கணிதம்	புலமை
திங்கள் வெள்ளி	செவ்வாய் வியாழன்	சனி ஞாயிறு	வியாழன்	சனி ஞாயிறு	சனி ஞாயிறு
மாலை 7.10 - 8.00	மாலை 6.15 - 7.10	மாலை 6.15 - 7.15	மாலை 7.10 - 8.00	காலை 7.00 - 8.00	மாலை 7.15 - 8.15

Learn Easy வெளியீடு

புலமைவளரி

இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

(முழுப் பதிப்புரிமையுடையது) (All Rights Reserved)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021
தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-06
வினாத்தாள் - II

சுட்டெண் :- .....

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - * **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - * **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**
  - * **இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.**
  - * **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
  - * **விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - * **விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**
  - * **செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.**

(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை எழுதுக.

நீல வானை செந்நிறமாக்கிய கதிரவன் தன் பொற்கரங்களை நீட்டிப் பனித்துளிகளைத் தொட்டுச் செல்கின்றான். கதிரவனின் பொற்கரம் பட்டதும் இலைகளின் நடுவே இரத்தினக் கற்களாக மின்னிய பனித்துளிகள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின.

(1) பெயர் அடைமொழிச் சொல் ஒன்று தருக. .....

(2) "பொற்கரங்கள்" என்பதைப் பிரித்து எழுதுக. .....

(3) உயர்திணை ஆண்பால் நிகழ்கால வினைச்சொல் ஒன்று தருக. .....

(4) சினைப்பெயர் ஒன்று தருக. .....

(5) "பனித்துளிகளை" என்பதன் ஒருமை வடிவினை எழுதுக. .....

(02) கீழே தரப்பட்டுள்ள பழமொழியின் கருத்தை விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

பழமொழி :- சூடு கண்ட பூனை அடுப்படியை நாடாது.

(1) கோபம் சிந்தனைக்கு இடையூறாக இருக்கும். (2) அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்.

(03) அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) பாலன் கடிதத்தை ..... (உறையில் / உரையில்) இட்டான்.

(2) சிறுவர்கள் பந்தை ..... (எறிந்து / எரிந்து) விளையாடினார்கள்.

(04) பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறிகளை இடுக.

முகிலன் தனது நண்பனைப் பார்த்து நாளைக்குப் பாடசாலைக்கு வருவாய்தானே எனக் கேட்டான்

(05) கீழே முதலில் தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியங்களில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) வரிசை வரிசையாக, வீதி வீதியாக,
1. இணைமொழியாக 2. அடுக்குமொழியாக 3. இரட்டைக்கிளவியாக

(2) குடுகுடு, கமகம,
1. அடுக்குமொழியாக 2. இணைமொழியாக 3. இரட்டைக்கிளவியாக

(3) ஏழை எளியவர், இன்பதுன்பம்,
1. இணைமொழியாக 2. இரட்டைக்கிளவியாக 3. அடுக்குமொழியாக

(06) கீழே தரப்பட்டுள்ள எதிர்கால வாக்கியத்தை நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

நாங்கள் ஆற்றங்கரைக்குச் செல்வோம். :- .....

(07) பின்வரும் கருத்துக்களை உணர்த்தும் மரபுத்தொடர்களைக் கூண்டினுள் இருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

கண் திறத்தல் ,	வாயூறுதல் ,	கதை வளர்த்தல் ,	தட்டிக்கொடுத்தல்

(1) உற்சாகப்படுத்துதல் :- ..... (2) அறிவு உண்டாதல் :- .....

(08) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொற்றொடருக்கும் உரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(1) ஒன்று போல் இருக்கும் மற்றொன்று :- .....

(2) எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன் :- .....

www.ikedu.lk

(09) கூண்டினுள் தரப்பட்டுள்ள எழுத்துக்களைக் கொண்டு வெற்றிடங்களைப் பூர்த்தி செய்க.

ழ் , ஞ் , க் , ய் , ப் , ண்

(1) வல்லின எழுத்துக்கள் இரண்டினை எழுதுக. ..... (2) மெல்லின எழுத்துக்கள் இரண்டினை எழுதுக. .....

(3) இடையின எழுத்துக்கள் இரண்டினை எழுதுக. .....

(10) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (X) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள்ளே அடையாளமிடுக.

(1) "செய்தாய்" உயர்திணை முன்னிலை ஒருமை வினைச்சொல்லாகும். ( )

(2) "நாங்கள்" உயர்திணை முன்னிலை பன்மைப் பெயர்ச்சொல்லாகும். ( )

(11) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) It ..... (has / have) a tail. (2) How many flowers ..... (is / are) there?

(12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.

(1) Hurry up please :- ..... (2) May I go out? :- .....

(13) பின்வரும் ஒவ்வொரு உருவிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(1)  :- .....

(2)  :- .....

(14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய கருத்துக்களைத் தமிழில் எழுதுக.

(1) அய்யா :- ..... (2) புட்டுவ :- .....

(15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

பந்தைத் தாருங்கள். :- .....

(16)

9	3	12
15		6

கட்டத்தினுள் உள்ள எல்லா எண்களையும் பயன்படுத்தி பொது வித்தியாசம் 3 ஆகவுள்ள எண்கோலம் ஒன்றை ஆக்கி எழுதுக. .....

(17) கடையொன்றில் வைக்கப்பட்டிருந்த விலைப்பட்டியல் பின்வருமாறு தரப்பட்டுள்ளது. அவ்விலைப்பட்டியலின்படி, பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

விலைப்பட்டியல்		
	ரூபா	சதம்
1kg அரிசி	100	.00
1l பால்	80	.00
2 சவர்க்காரங்கள்	60	.00
50cm துணி	120	.00


பொருட்களின் வகைகள்	கொள்வனவு செய்த அளவுகள்	ரூபா	சதம்
(1) துணி	1m	.....	.....
(2) அரிசி	250g	.....	.....
(3) சவர்க்காரம்	.....	30	00
(4)	**கூட்டுத்தொகை**	.....	.....

(18) முற்பகல் 9.40 மணிக்கு வரவேண்டிய புகையிரதம் வந்தடைந்தது $\frac{1}{2}$ மணித்தியாலம் தாமதித்தாகும். அதன்படி, அப்புகையிரதம் வந்தடைந்த நேரத்தை எழுதுக. .....

(19) வியாபாரியிடம் 10 மாம்பழங்கள் இருந்தன. அவர் அவற்றில் 0.3 ஐ விற்றார். அதன்படி, அவரிடம் எஞ்சியிருக்கும் மாம்பழங்களின் எண்ணிக்கையைப் பின்னத்தில் எழுதுக. .....

(20) 12 மணித்தியாலக் கடிகாரம் பி.ப 4.45 எனக் காட்டும்போது 24 மணித்தியாலக் கடிகாரம் காட்டும் நேரம் யாது? .....

(21) சதுரமுகியொன்றின் விளிம்புகளின் எண்ணிக்கை அதன் முகங்களின் எண்ணிக்கையின் எத்தனை மடங்காகும்? .....

(22)  இவ்வுருவில் காணக்கிடைக்கும் செங்கோணங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

(23) ஒரு பாத்திரத்திலிருந்த பாலில் இருந்து 3 லீற்றர் 600 மில்லிலீற்றர் பாலை விற்றபின், எஞ்சியிருந்த பாலின் அளவு 6 லீற்றர் 700 மில்லிலீற்றர் ஆகும். எனின், ஆரம்பத்தில் அப்பாத்திரத்திலிருந்த பாலின் அளவு யாது? .....

(24) ஒரு மாணவன் A எனும் இடத்திலிருந்து 50m வடக்குத் திசைக்குச் செல்கின்றான். பின்னர் அவன் அவ்விடத்திலிருந்து 50m மேற்குத் திசைக்குச் சென்று B எனும் இடத்தில் நிற்கின்றான். எனின், B இற்கு எத்திசையில் A அமைந்துள்ளது?

.....


www.ikeou.lk

(25) கீழே தரப்பட்டுள்ள எண்களின் ஒழுங்குமுறைக்கேற்ப எண்கோலம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு நீக்கப்பட வேண்டிய எண் யாது?

64 , 32 , 24 , 16 , 8 , 4 :- .....

(26) கீழே தரப்பட்டுள்ள உரோம எண்குறிக்கு முன்னால் உள்ள எண்ணையும், பின்னால் உள்ள எண்ணையும் உரோம எண்குறிகளில் எழுதுக.

..... , XV , ...

(27)  இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ளது இரு சம பக்கங்களைக் கொண்ட முக்கோணியாகும். அதன்படி இவ்வுருவின் சமச்சீர் அச்சுக்களை வரைந்து காட்டுக.

(28) 50709 எனும் எண்ணை எழுத்துக்களில் எழுதுக. .....

(29) (1) ஒவ்வொன்றும் 12kg 500g ஆகவுள்ள இரண்டு அரிசி மூட்டைகளின் மொத்த நிறை யாது? .....

(2) மனிதரொருவர் புகையிரதத்தில் 24km 700m தூரமும், பேருந்தில் 10km 800m தூரமும் பயணித்தார். அதன்படி,

அவர் இரு வாகனங்களிலும் பயணம் செய்த மொத்தத் தூரம் யாது? .....

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) தினமும் போதுமான அளவு நீர் பருகுவதனால் எமக்குக் கிடைக்கும் நன்மை அல்லாதது,

(1) உடற்கொழுப்பு குறைவடைதல். (2) பூரிப்பான தோல் கிடைத்தல். (3) உடல் தளர்ச்சி அடைதல்.

(31) இலங்கையில் அமைந்துள்ள உலக மரபுரிமை ஒன்றல்லாதது,

(1) சிகிரியா (2) தாமரைக் கோபுரம் (3) சிங்கராஜவனம்

(32)  இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ளவர் இலங்கை சுதந்திரப் போராட்டத்தின் பிரதான தளபதியொருவராவார். அவரது பெயர்,

(1) கொங்காலேகொட பண்டா (2) மொனரவில கெப்பிட்டிப்பொல திசாவை

(3) டீ. எஸ். சேனாநாயக்கா

(33) மரங்கள் நடுவதால் கிடைக்கக்கூடிய பயன் அல்லாதது,

(1) சுத்தமான வளி கிடைத்தல். (2) சூழலின் வெப்பநிலை அதிகரித்தல். (3) மண்ணரிப்புக் குறைவடைதல்.

(34) இலங்கைக்கே உரித்தான தாவரங்களைக் கொண்ட விடை,

(1) எண்ணை, காட்டிலுப்பை (2) தேயிலை, இறப்பர் (3) தென்னை, ஈரப்பலா

(35) பூக்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவுவது அல்லாதது,

(1) தேனீ (2) வண்ணத்துப்பூச்சி (3) வீட்டு ஈ

(36) குப்பைக் கூளங்களை உண்பதன் மூலம் சூழலைச் சுத்தப்படுத்தும் பிராணி,

(1) காகம் (2) வெளவால் (3) கொக்கு

(37)  இச்செயற்பாடு அழைக்கப்படுவது,

(1) மயிர்க்கொட்டி போன்று செல்லல். (2) நண்டு போன்று நடந்து செல்லல்.

(3) தவளை போன்று பாய்ந்து பாய்ந்து செல்லல்.

(38) வீட்டில் தாம் தனிப்பட்ட வகையில் பயன்படுத்தும் பொருட்களைக் கொண்ட விடை,

(1) பற்தூரிகை, துடைப்பான் (2) தும்புத்தடி, தொலைக்காட்சி (3) முகம் பார்க்கும் கண்ணாடி, மின்விசிறி

(39) இலங்கையில் மின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படாதது,

(1) நீர் (2) நிலக்கரி (3) விறகு

(40) அரசினால் எமக்கு இலவசமாகப் பெற்றுத்தரப்படும் சேவைகள்,

(1) மின்சாரம், நீர் (2) கல்வி, சுகாதார சேவைகள் (3) தொலைபேசி, போக்குவரத்துச் சேவைகள்

(41) விற்றமின் C அதிகளவில் அடங்கியுள்ள உணவுகள்,

(1) தோடை, நெல்லி (2) மீன், பால் (3) அவரை, கடலை

(42) கண் பார்வை குறைவடைவது,

(1) விற்றமின் B குறைபாட்டினால் (2) விற்றமின் A குறைபாட்டினால் (3) விற்றமின் C குறைபாட்டினால்

(43) வைத்தியரொருவரினால் வழங்கப்பட்ட மருந்தை உட்கொள்ளும்போது கவனஞ் செலுத்த வேண்டிய விடயம் அல்லாதது,


(1) ஊட்டு அளவு மற்றும் மருந்து உட்கொள்ள வேண்டிய தடவைகள் குறித்து


(2) மருந்து உட்கொள்ள வேண்டியது உணவுக்கு முன்னரா? உணவுக்குப் பின்னரா? என்பது குறித்து


(3) மருந்துகளில் அடங்கியுள்ள இரசாயனச் சேர்வைகள் எவை என்பது குறித்து

www.kedu.lk

(44) சம அளவான சிறிய துவாரங்கள் மூன்று வீதம் இடப்பட்டுள்ள பாத்திரங்கள் மூன்று கீழே காட்டப்பட்டுள்ளன. மூன்று பாத்திரங்களிலும் நீர் நிரப்பப்பட்டுள்ளது. அம்மூன்று பாத்திரங்களிலும் நீர் வெளியேறும் வேகத்தைச் சரியாகக் காட்டும் பாத்திரத்தைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 

(45) சாதாரண நீரில் விட உவர் நீரில் பொருட்கள் அதிகமாக மிதக்கின்றன. இக்கூற்று,

(1) தவறானது (2) சரியானது (3) கூறமுடியாது

(46) உறுதியான தண்டுடைய தாவரங்கள்,

(1) பருத்தி, மா (2) ஈரப்பலா, முருங்கை (3) பாலை, முதிரை

(47) இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சி,

(1) பம்பரகந்த (2) தியலும (3) துன்ஹிந்த

(48) மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் முதலாவது படிமுறை,


(1) பிரார்த்தனை (2) மனவுறுதி (3) உடலைத் தளர்த்துதல்

(49) வாகனமொன்று பின்னோக்கிச் செல்லும்போது ஒளிரும் விளக்கின் நிறம்,

(1) சிவப்பு (2) வெள்ளை (3) மஞ்சள்

(50) உடன் உணவுகளைத் தினமும் உண்பதால் ஏற்படக்கூடிய நோய்கள்,


(1) நீரிழிவு, உயர்குருதி அமுக்கம் (2) நெருப்புக் காய்ச்சல், வாந்திபேதி (3) டெங்கு, மலேரியா

(51) 

மின்சூழ் மின்குமிழ்கள் இரண்டு உலர் மின்கலம் ஒன்றிற்குச் செப்புக் கம்பியினால் இணைக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) A மின்குமிழ் ஒளிரும், B மின்குமிழ் ஒளிராது. (2) A மின்குமிழ் ஒளிராது, B மின்குமிழ் ஒளிரும்.

(3) A, B ஆகிய இரண்டு மின்குமிழ்களும் ஒளிரும்.

(52) 

சட்டக்காந்தத்தின் நடுப்பகுதியில் நூலொன்றைக் கட்டிக் கிடையாகவும் சமநிலையாகவும் தொங்கவிடப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. அதன்படி, சட்டக்காந்தத்தின் ஒரு முனை திரும்பியுள்ளது,

(1) வடக்குத் திசைக்கு (2) கிழக்குத் திசைக்கு (3) மேற்குத் திசைக்கு

(53) நடுவதற்கு மிகவும் பொருத்தமான வித்துக்கள்,

(1) நீரில் மிதக்கும் வித்துக்கள் (2) நீரில் அமிழும் வித்துக்கள் (3) மேற்படி விடைகள் அனைத்தும் தவறானவை.

(54) வானில் மிக உயரத்தில் பறக்கின்ற கூர்மையான கண்களையுடைய ஊனுண்ணிப் பறவை,

(1) ஆந்தை (2) செண்பகம் (3) கழுகு

(55) செயற்கை நிறப்பொருட்கள், சுவையூட்டிகள் ஆகியன சேர்க்கப்பட்ட உணவுகளை உட்கொள்வதால் ஏற்படக்கூடிய நோய்,

(1) நீரிழிவு (2) புற்றுநோய் (3) நீர்வெறுப்பு நோய்

(56) விளையாடும்போது கைக்கவசம், காற்கவசம் அணியப்படுகின்ற விளையாட்டு,

(1) கரப்பந்து (2) எல்லே (3) கிரிக்கெட்

(57) தனது வீடாகப் புற்றை அமைக்கும் விலங்கு,

(1) கறையான் (2) பாம்பு (3) குளவி

(58) இக்குறியீட்டினால் குறிக்கப்படுவது,

(1) இலங்கை மின்சார சபை (2) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

(3) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

(59) தொற்றுநோய் பரவும்போது உடனடியாக அறிவிக்க வேண்டியது,

(1) பொது சுகாதார பரிசோதகருக்கு (2) கிராம சேவகருக்கு (3) பாடசாலை அதிபருக்கு

(60) "எங்கள் ஊரில் பல மாதங்களாக மழை பெய்யவில்லை" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

(1) .....

(2) .....

(3) .....

www.ikeau.lk

புதிய கல்வியாண்டு - 2022

LEARN EASY
KNOWLEDGE IS POWER

ZOOM
வகுப்புக்கள்

Grade 2 - O/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

LEARN EASY
KNOWLEDGE IS POWER

www.learneasy.lk || www.lkedu.lk

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-06

விடைப்பத்திரம்

வினாத்தாள் - I

(01) 1	(02) 3	(03) 1	(04) 2	(05) 3
(06) 1	(07) 2	(08) 3	(09) 1	(10) 2
(11) 1	(12) 3	(13) 2	(14) 1	(15) 3
(16) 2	(17) 1	(18) 3	(19) 2	(20) 1
(21) 3	(22) 2	(23) 1	(24) 3	(25) 2
(26) 1	(27) 3	(28) 2	(29) 1	(30) 3
(31) 2	(32) 1	(33) 3	(34) 2	(35) 1
(36) 3	(37) 1	(38) 2	(39) 1	(40) 3

வினாத்தாள் - II

(01) (1) நீல (2) பொன் + கரங்கள் (3) செல்கின்றான் (4) இலை / கரம் (5) பனித்துளியை

(02) அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும். (03) (1) உறையில் (2) எறிந்து

(04) முகிலன் தனது நண்பனைப் பார்த்து, "நாளைக்குப் பாடசாலைக்கு வருவாய்தானே?" எனக் கேட்டான்.

(05) (1) அடுக்குமொழியாக (2) இரட்டைக்கிளவியாக (3) இணைமொழியாக (06) நாங்கள் ஆற்றங்கரைக்குச் செல்கின்றோம்.

(07) (1) தட்டிக்கொடுத்தல் (2) கண் திறத்தல் (08) (1) போலி (2) தீர்க்கதரிசி


(09) (1) க், ப் (2) ஞ், ண் (3) ழ், ய் (10) (1) ✓ (2) ✗ (11) (1) has (2) are

(12) (1) தயவு செய்து விரைவுபடுத்துங்கள். (2) நான் வெளியே போகலாமா? (13) (1) Comb (2) Mango

(14) (1) அண்ணா (2) கதிரை (15) போலய தென்ன. (16) 3, 6, 9, 12, 15

(17) (1) ரூபா 240.00 (2) ரூபா 25.00 (3) 1 (4) ரூபா 295.00 (18) மு.ப 10.10

(19) $\frac{7}{10}$ (20) 16:45 (21) இரண்டு மடங்கு (22) 8 (23) $10l\ 300ml$

(24) தென்கிழக்குத் திசையில் (25) 24 (26) XIV, XVI (27) 

(28) ஐம்பதாயிரத்து எழுநூற்று ஒன்பது (29) (1) 25kg (2) 35km 500m

(30) 3	(31) 2	(32) 1	(33) 2	(34) 1
(35) 3	(36) 1	(37) 2	(38) 1	(39) 3
(40) 2	(41) 1	(42) 2	(43) 3	(44) 1
(45) 2	(46) 3	(47) 1	(48) 3	(49) 2
(50) 1	(51) 3	(52) 1	(53) 2	(54) 3
(55) 2	(56) 3	(57) 1	(58) 2	(59) 1

(60) எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியான முறையில் அமையுமாறு வாக்கியங்கள் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

புள்ளித்திட்டம்

வினாத்தாள் I ($2\frac{1}{2}$ X 40 = 100 புள்ளிகள்)

வினாத்தாள் II (1) 5 புள்ளிகள் (2) 1 புள்ளி (3) 2 புள்ளிகள் (4) 1 புள்ளி (5) 3 புள்ளிகள் (6) 1 புள்ளி

(7) 2 புள்ளிகள் (8) 2 புள்ளிகள் (9) 3 புள்ளிகள் (10) 2 புள்ளிகள் (11) 2 புள்ளிகள் (12) 2 புள்ளிகள்

(13) 2 புள்ளிகள் (14) 2 புள்ளிகள் (15) 1 புள்ளி (16) 2 புள்ளிகள் (17) 4 புள்ளிகள் (18) 2 புள்ளிகள்

(19) 2 புள்ளிகள் (20) 2 புள்ளிகள் (21) 2 புள்ளிகள் (22) 2 புள்ளிகள் (23) 2 புள்ளிகள் (24) 2 புள்ளிகள்

(25) 2 புள்ளிகள் (26) 2 புள்ளிகள் (27) 2 புள்ளிகள் (28) 2 புள்ளிகள் (29) 3 புள்ளிகள்

(30 — 59) 30 புள்ளிகள் (60) 6 புள்ளிகள், முழு விடைத்தாளையும் கவனத்திற்கொண்டு கையெழுத்து, இலக்கங்கள் போன்றவை தெளிவாகவும் சரியாகவும் எழுதப்பட்டிருப்பின் 2 புள்ளிகள் வழங்கவும்.

www.ikeau.lk